[2014 ஜூலை 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

198—

சொகுசுப் பேருந்து

***34797—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவிலிலிருந்து சென்னைக்குப் புதிய குளிர்சாதன சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவையடுத்து, மேற்படி வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

முற்பகல் 10—15

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு பணிவுடன் வணங்குகிறேன். சங்கரன்கோவிலிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து வசதி ஏதுமில்லை. சாதாரண பேருந்து வசதி மட்டுமே உள்ளது. எனவே, சங்கரன்கோவிலிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன் பேருந்து ஒன்றினை இயக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

2014 ஜூலை 21]

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குளிர்சாதனப், பேருந்து வசதி வேண்டுமென்று கோரியிருக்கிறார். வருங்காலங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல சங்கரன்கோவிலிலிருந்து சென்னைக்கு திருவேங்கடம் வழியாக புதிய பேருந்து ஒன்றையும் சங்கரன்கோவிலிலிருந்து கோயம்புத்தூர், கூடலூர் வரை ஒரு பேருந்தையும் இயக்க ஆவன செய்ய வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய இரு வழித்தடங்களையும் ஆய்வு செய்து, பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில் அந்தப் பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*